بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/08/2023 அன்று U.K - பைத்துல் ஃபு(த்)தூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# 2023 ஆம் ஆண்டின் பிரிட்டன் ஆண்டு மாநாடு தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டும் இறை அருள்கள் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் அருளால் கடந்த வெள்ளி முதல் ஞாயிறு வரை யூ.கே அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடந்தது. இவ்வருடம் கலந்து கொண்டோரின் எண்ணிக்கையும் கடந்த வருடத்தை விட மிக அதிகமாக இருந்தது. இதற்கு நாம் அல்லாஹ்வுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் குறைவுதான்! அவன் நமது மாநாட்டை அளவற்ற அருள்களால் நிரப்பி விட்டான். இது அவனுடைய பேருபகாரம் ஆகும். நாமோ பலவீனமானவர்களாக இருக்கின்றோம். அல்லாஹ்வின் அருள்களால்தான் நம்முடைய வேலைகள் நடக்கின்றன.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَاِنۡ تَعُدُّوۡا نِعۡمَةَ اللّٰہِ لَا تُحۡصُوۡہَا ؕ

“நீங்கள் அல்லாஹ்வின் அருட்களை எண்ணத் தொடங்கினால், அவற்றை உங்களால் (ஒருபோதும்) கணக்கிட முடியாது.” (திருக்குர்ஆன் 16: 19)

அஹ்மதிய்யா ஜமாஅத் தினந்தோறும் அல்லாஹ்வின் இந்த கூற்றை கண்டு வருகிறது.

எனவே நன்றி செலுத்துவது நமது வேலையாகும். அல்லாஹ்வின் அருள்களுக்காக அவன் முன் குனிந்து கொண்டே செல்ல வேண்டியது நமது கடமையாகும். நாம் எப்பொழுதுவரை நமது கடமையை நிறைவேற்றிக் கொண்டே செல்வோமோ, அப்பொழுது வரை அல்லாஹ் நமது பாதங்களை முன்னேறச் செய்து கொண்டே இருப்பான் இன்ஷாஅல்லாஹ்! எனவே ஏற்பாட்டாளர்களும், கலந்து கொண்டோர் அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இப்போது நான் ஊழியர்களுக்கும் நன்றி கூற விரும்புகின்றேன். எல்லா ஊழியர்களும் மிகச் சிறந்த முறையில் தம் கடமைகளை நிறைவேற்றினார்கள். புன்சிரித்தவாறு, அசாதாரண முறையில் தம் டியூட்டிகளை நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு வருடமும் பெண்கள் சார்பாக உணவுக்கான ஏற்பாடு விஷயத்தில்

முறையீடுகள் வரும். ஆனால் இம்முறை முறையீடே இல்லை என்ற அளவுக்குதான் உள்ளது.

அதேபோன்று டிராஃபிக், உணவு சமைக்கும் துறை, ரொட்டி பிளான்ட், செக்யூரிட்டி, தூய்மை - இவை அனைத்தையும் விட முக்கியமானதாக MTA - அது இம்முறை புதிய கோணத்தில் முழு உலகையும் மாநாட்டுடன் இணைத்துள்ளது. ஆகவே, அனைத்து துறைகளுக்கும் நான் நன்றி கூறிக் கொள்கிறேன். அவற்றின் பெயரை நான் கூறியிருந்தாலும் சரி! கூறவில்லையென்றாலும் சரி!

வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த அந்நியர்கள் மாநாடு தொடர்பாக தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். அவற்றிலிருந்து சில கருத்துக்களை மட்டும் எடுத்து வைக்கின்றேன். அனைத்தையும் எடுத்துரைப்பது சாத்தியமற்றதாகும்.

**(Burkina Faso) புர்கினோ ஃபாசோவுடைய** புகழ்பெற்ற கண் மருத்துவர் ஒருவர் கூறுகிறார்: ஆயிரக்கணக்கான மக்கள், ஒன்றுபட்ட நோக்கத்திற்காக, ஒரு மார்க்க தலைவரை சுற்றி ஓரிடத்தில் ஒன்று கூடியிருக்கிறார்கள். இந்த அளவு நேர்த்தியான, விரிவான ஏற்பாடுகள் என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டன.

**அமெரிக்காவைச்** சார்ந்த ஒரு புகழ் பெற்ற மூத்த சட்ட பேராசிரியர் ஒருவர் கூறுகிறார்: உலகெங்கிலும் இது போன்ற நிகழ்ச்சிகளை நானும் நடத்தியுள்ளேன். அந்த நிகழ்ச்சிகளில் ரிஜிஸ்ட்ரேஷன் உடைய வேலைகளும் நடக்கும். ஆனால் ஆண்டு மாநாட்டில் எந்த அளவு கட்டமைப்பான முறையில் ரிஜிஸ்ட்ரேஷன் உடைய நடவடிக்கைகள் முடித்து கொடுக்கப்படுகின்றன என்பதை கண்ட போது அது வியப்பை தரக்கூடிய காட்சியாக இருந்தது.

**(Belize) பெலீஸ்** உடைய ஒரு நகரத்தின் மேயர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: நான் எனது வாழ்நாளில் இவ்வளவு அமைதி நிறைந்த மக்களை கண்டதில்லை. நான் இங்கு கண்ட ஆன்மீக சூழல் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை எனக்கு வியப்பை ஏற்படுத்துபவையாக இருந்தன.

**இந்தோனேஷியாவுடைய** முன்னாள் மத விவகார அமைச்சர் கூறுகிறார்: 'எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் வெறுப்பில்லை' என்ற உங்களுடைய முழக்கத்தை நான் ஏர்போர்ட்டில் இருந்து காண ஆரம்பித்தேன். மாநாட்டின் அனைத்து நாட்களிலும் அதைக் கண்டுணர்ந்தேன்.

**கேம்பியாவுடைய** தகவல் அமைச்சகத்தைச் சார்ந்தவர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டின் அனைத்து ஏற்பாடுகளைக் கண்டு மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். இவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு சண்டை சச்சரவை கூட காணமுடியவில்லை! நான் கண்ட இன்னொரு விஷயம் என்னவென்றால், ஜமாத்தினர்கள் தம் இமாமை நேசிப்பது ஆகும். இதற்கு ஈடான ஒன்று உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காது.

**பிரேஸிலிருந்து** வந்திருந்த பிரதிநிதி ஒருவர் கூறுகிறார்: 118 நாடுகளைச் சார்ந்த மக்கள் ஓரிடத்தில், சகோதரத்துவ சூழலில் ஒன்றாக இருப்பது மற்றவர்களால் இயலாத விஷயமாகும். அனைத்து மக்களும் இவ்வாறு பரஸ்பர மரியாதை, ஒழுக்கம், நல்லியல்பு, அனுதாபத்தோடு சந்திப்பது ஆகியவை எனக்கு மிகவும் பிடித்துள்ளது. விருந்தினர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மிக நன்றாக இருந்தது.

**ஸ்பெயினிலிருந்து** வந்திருந்த குழுவில் வரலாற்றாசிரியர் ஒருவரும் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: நிச்சயமாக தற்போதைய காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் துணிவு, தைரியம் மற்றும் கடும் முயற்சி ஆகியவற்றின் ஓர் உயரிய முன்மாதிரியை நிலைநாட்டி உள்ளது.

**இத்தாலியைச்** சார்ந்த ஒரு பத்திரிக்கையாளர் கூறுகிறார்: நான் மாநாட்டைக் குறித்து முன்பும் கேட்டுள்ளேன்; படித்துள்ளேன். ஆனால் மாநாட்டில் கலந்து கொள்வது முற்றிலும் வேறு அனுபவமாக இருந்தது. எல்லாவற்றையும் விட முக்கியமாக நான் ஆண்டு மாநாட்டில் கண்ட விஷயம் என்னவென்றால், அது தொழுகையாகும்.

**செனிகாலுடைய** ஒரு மண்டல கவர்னர் கூறுகிறார்: இப்படிப்பட்ட பரஸ்பர நேசத்தை நான் இதற்கு முன்பு ஒருபோதும் கண்டதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மேற்கோள்கள் என் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டில் ஒவ்வொரு நபரும் தன்னைவிட மற்றவருக்கு முன்னுரிமை கொடுத்தார்.

**கொலம்பியாவைச்** சார்ந்த விருந்தினர் ஒருவர் கூறுகிறார்: இங்குள்ள அமைதி நிறைந்த சூழல், சகோதரத்துவம், நேசம், தற்போதைய கலீஃஃபா அவர்களின் ஞானமிகு சொற்பொழிவுகள், ஜமாஅத்தினர்கள் ஆகியவற்றால் நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன்.

**(Chile) சிலியிலிருந்து** ஒரு கிறிஸ்தவ அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் பாதிரியார் ஆவார். அவர் கூறுகிறார்: உங்களுடைய ஜமாஅத் ஓர் உடலைப் போன்றதாக உள்ளது. தற்போதைய கலீஃஃபா, அந்த உடலுடைய தலையாகவும் மூளையாகவும் இருக்கிறார். ஜமாஅத் அந்த உடலின் பாகங்களாக இருக்கின்றது. அது மூளையின் சமிக்ஞைக்கு ஏற்ப செயல்படுகின்றது.

**ஸ்பெயினைச்** சார்ந்த தப்லீகியின் கீழ் இருக்கும் நண்பர் ஒருவர் கூறுகிறார்: இந்த மாநாட்டில் அரசர்களை விடவும் மேலான முறையில் என்னுடன் நடந்து கொள்ளப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய தன்னார்வலர்கள் 40 ஆயிரத்தை விடவும் அதிகமான மக்களுக்கு களைப்படையாமல் தொண்டு செய்வது ஓர் அற்புதமாக இருந்தது. நிச்சயமாக இந்த மாநாட்டின் அருளால் நான் அல்லாஹ்வுடன் இணைந்து விட்டேன்.

**கனடாவைச்** சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொள்வது எனக்கு ஒரு மகத்துவமான விஷயமாக இருந்தது. தம் மார்க்கத்துடன் நன்றி உணர்வுடன் இருப்பது குறித்தும், தன்னார்வமான முறையில் பணியாற்றுவது குறித்தும் இந்த மாநாட்டிலிருந்து பாடம் கிடைக்கின்றது.

**துருக்கியுடைய** பிரிண்டிங் பிரஸ் உடைய சில நிர்வாகிகள் வந்திருந்தனர். அவர்களுள் ஓர் இயக்குனர் கூறுகிறார்: இவ்வளவு பெரிய மாநாட்டை எந்த அளவு திறமையான முறையில் நீங்கள் நடத்தியுள்ளீர்கள் என்றால் அது எனக்கு மிகப்பெரும் வியப்பை தருகின்றது! எனக்கு வியப்பை ஏற்படுத்திய இன்னொரு விஷயம் என்னவென்றால், இவ்வளவு பெரிய கூட்டத்தில் எந்த ஒரு நபரும் சிகரெட் பிடிப்பதை நான் காணவில்லை.

**(Latvia) லேத்வியாவிலிருந்து** வந்திருந்த சமூக சேவகி ஒருவர் கூறுகிறார்: இந்த மாநாட்டினால் எனக்கு இஸ்லாத்தைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. நான் திரும்பிச் சென்று திருக்குர்ஆனைப் படித்துப் பார்ப்பேன். இஸ்லாத்தைக் குறித்து எனது ஞானத்தை விரிவுபடுத்துவதற்கு முயற்சி செய்வேன்.

டிவி மூலமாக மாநாட்டை கண்டவர்களின் கருத்துக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

**(Congo-Brazzaville) காங்கோ குடியரசிலிருந்து** நமது முபல்லிக் எழுதுகிறார்: ஆண்டு மாநாட்டை பார்ப்பதற்காக ஒரு கிறிஸ்தவ நண்பர் அழைக்கப்பட்டிருந்தார். நிறைவுறையை கேட்ட பிறகு அவர் கூறினார்: உலகின் ஒவ்வோர் அரசாங்கமும் இந்த போதனைக்கு ஏற்ப செயல்பட்டால், உலகிலிருந்து ஏழ்மை முற்றிலும் நீங்கவில்லை என்றாலும் குறைந்தபட்சம் எந்த ஒரு நபரும் இரவில் பசியோடு உறங்காமல் இருப்பார். இஸ்லாத்தின் கலீஃபாக்கள் தம் குடிமக்களை எந்த அளவு கருத்தில் கொண்டார்களோ அதே போன்று நமது தலைவர்களும் தம் குடிமக்களை கருத்தில் கொண்டால் நமதுலகம் சொர்க்கமாக மாறிவிடும்.

**(Iceland) ஐஸ்லேண்டைச்** சார்ந்த **family federation for world peace** உடைய மிஷனரி கூறுகிறார்: எந்தெந்த ஜமாஅத் நபர்களை நான் சந்தித்தேனோ அவர்கள் அனைவரும் மென்மையான உள்ளமுடையவர்களாகவும், கண்ணியமானவர்களாகவும், பிறரை கருத்தில் கொள்ளக் கூடியவர்களாகவும், தொண்டுக்காக எல்லா நேரமும் ஆயத்தமாக இருப்பவர்களாகவும் இருந்தார்கள். தங்குவதற்கு மிகவும் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(Haiti) ஹைதியைச்** சார்ந்த நீதித்துறை போலீஸ் உடைய பிரதிநிதி ஒருவர் கூறுகிறார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடைய மாநாட்டில் கலந்து கொண்டு ஒரு கிறிஸ்தவராக எனக்கு இஸ்லாம் மட்டுமின்றி (பிற) மார்க்கங்கள் குறித்தும் பல்வேறு விஷயங்களை கற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அல்லாஹ்வின் அருளால் இவ்வாறான எண்ணற்ற சம்பவங்களும், ஆய்வுரைகளும், கருத்துக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அஹ்மதிகளின் வாழ்வு நிரந்தரமாக அல்லாஹ்வுடன் இணைந்திருக்கக்கூடிய வகையில் இந்த மாநாட்டின்

விளைவுகளை அல்லாஹ் வெளிப்படுத்துவானாக! நம்பிக்கையிலும் உறுதியிலும் முன்னேற்றம் ஏற்படட்டுமாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகையின் குறிக்கோளை பூர்த்தி செய்யக் கூடியவர்களாக ஆவோமாக! அன்னியர்கள் மீதும் எவ்வாறான தாக்கம் ஏற்பட வேண்டும் என்றால், அது தற்காலிகமானதாக இல்லாமல் நிரந்தரமாக அவர்களுடைய கண்களை திறக்கக் கூடியதாக இருக்கட்டுமாக!

மீடியாக்கள் மூலமாகவும் மாநாட்டின் நிகழ்ச்சிகள் பார்க்கப்பட்டன; கேட்கப்பட்டன. ஆப்பிரிக்காவில் 24 டிவி சேனல்களில் என் சொற்பொழிவுகள் முழுவதுமாக ஒளிபரப்பு செய்யப்பட்டன. இவ்வாறு 40 மில்லியனை விடவும் அதிகமான மக்கள் அந்த சொற்பொழிவுகளைக் கேட்டார்கள். பத்திரிக்கையாளர்களுக்காக ஊடக மையம் ஆயத்தம் செய்யப்பட்டது. அதில் 23 மீடியா பிரதிநிதிகளும், பத்திரிக்கையாளர்களும் கலந்து கொண்டார்கள். இவ்வாறு தினசரி அறிக்கைகளை ஆயத்தம் செய்தார்கள். மொத்தம் 72 செய்தி அறிக்கைகள் ஆயத்தமாகின. அவை ஏறக்குறைய 50 மில்லியன் மக்கள் வரை சென்றடைந்துள்ளது. 41 வெப்சைட்டுகளில் செய்திகள் ஒளிபரப்பாகி உள்ளன. மாநாட்டைக் குறித்து 15 கட்டுரைகள் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளன. பல்வேறு டிவி சேனல்களின் மூலமாக 14 செய்திகள் ஒளிபரப்பாகி உள்ளன. ரேடியோ ஸ்டேஷன்கள் மூலமாகவும் 37 செய்திகள் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாக, எல்லா வகையிலும் அல்லாஹ் இந்த மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்கியுள்ளான்.

பணிவை மேற்கொண்டவாறு, நன்றி செலுத்தக்கூடிய அடியார்களாக ஆகியவாறு, எப்பொழுதும் நமது சீர்திருத்தத்தை மேற்கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)